ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 1815/30 - 2013 ජුනි මස 22 වැනි සෙනසුරාදා - 2013.06.22
*1815/30 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு யூன் மாதம் 22 ஆந் திகதி சனிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

### குண்டசாலை பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்

குண்டசாலை பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவி, கட்சி உறுப்புரிமை இல்லாதொழிந்தமை காரணமாக வெற்றிடமாகியிருக்கின்றதாதலாலும் ;

முத்துபடின் கெதர சுனிமல் புஷ்ப குமார எனும் உறுப்பினர் சேர்ந்திருந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான மக்கள் விடுதலை முன்னணியின் செயலாளர், முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட வேண்டிய அக்கட்சியைச் சேர்ந்தவரும், குண்டசாலை பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு தகுதியுடையவருமான ஆளொருவரைப் பெயர் குறிப்பதற்கு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளரினால் அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு தகுதியுள்ள ஆளொருவராக திரு. டீ. கே. நிஷாந்த தசநாயக என்பவரைப் பெயர் குறித்து நியமித்துள்ளார் ஆதலாலும் ;

இப்போது குண்டசாலை பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் முதியன்சேலாகே குமுது சமன் ஸ்ரீ ரத்நாயக்க ஆகிய நான், திரு. டீ. கே. நிஷாந்த தசநாயக என்பவர் குண்டசாலை பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

சமன் ஸ்ரீ ரத்நாயக்க,
தெரிவத்தாட்சி அலுவலர்,
குண்டசாலை பிரதேச சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
கண்டி,
2013, யூன் 10.

7 - 184

**உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின்**
**(262 ஆம் அத்தியாயம்) 10 அ (1) (அ) என்னும் பிரிவின் கீழான அறிவித்தல்**

வீரகெட்டிய பிரதேச சபை

வீரகெட்டிய பிரதேச சபையின் உறுப்பினரொருவரான திரு. வெல்லஹேனகே சந்திரபால அவர்கள், மக்கள் விடுதலை முன்னணி கட்சியின் உறுப்பினராக இல்லாதொழிந்துள்ளதால், மேற்படி பிரதேச சபையின் அவரது உறுப்பினர் பதவியை அவர் இழந்துள்ளாரென வீரகெட்டிய பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் வேவெல்வல ஹேவகே ரவிந்திர விஜய குமார ஆகிய நான், (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 10அ (1) (அ) என்னும் பிரிவின் கீழ் இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

டபிள்யூ. எச். ஆர். விஜய குமார,
தெரிவத்தாட்சி அலுவலர்,
வீரகெட்டிய பிரதேச சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
அம்பாந்தோட்டை,
2013, யூன் 5.

7 - 185

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.